...ழ நாட்டு வாசகம

இரண்டாம் புத்தகம்



THE REGISTRAR OF BOOKS
MADRAS

TB
031(இ)
N49
132425

தமிழ் நாட்டு வாசகம்

இரண்டாம் புத்தகம்

மணி. முத்துசாமி
தொகுத்தது

முருகன் பதிப்பகம்
குளித்தலை :: திருச்சிராப்பள்ளி

பதிப்புரிமை] [விலை அணா ஐந்து

முதல் பதிப்பு 1949

Printed at
ST. JOSEPH'S INDUSTRIAL SCHOOL PRESS
TRICHINOPOLY

—

1949

MADRAS
30 DEC 1949

முகவுரை

பாட புத்தகங்கள் பற்பல பெருகியுள. எனினும், காலவகைக்கேற்ப முன்னேற்ற முறையில் சமூக வாழ்விற்கியையவும், நல்லறிவும், நற்பண்பும், ஒற்றுமையும், ஒத்தவுணர்ச்சியும் இளமை முதலே படியும் வகையில், பழையன கழிக்கப்பெற்றும் புதியன புகுக்கப்பெற்றும், தெள்ளிய நடையில் பொருட்சுவை சொற்சுவை வகுப்பு வாரியாகவும் படிப்படியாகவும் அமைந்தனவாய், புதிய முறையில் வெளிவரும் வாசக பாடங்களே இப்போது வேண்டப்படுவன.

இந்நோக்கத்தை முற்றிலும் தழுவிப் பயனற்ற பாடங்கள் வெற்றெனத் தொகுக்கப் பெறாமல், வாழ்க்கைக்குப் பயன்படும் பாடங்களையே உடையதாய் தமிழ் நாட்டு வாசகங்கள் மலர்கின்றன.

இம்முயற்சியில் பெரிதும் உதவியவர் ஆரம்ப முதல் எல்லா வகுப்புகளிலும் அநுபவமுடையவராகிய இ. ஆர். ஹைஸ்கூல் தமிழாசிரியர் K. நாகராஜராவ் ஆவர். அவர்களுக்கும், மகாகவி பாரதியாரின் பாடலை வெளியிட அனுமதியளித்த சென்னை அரசியலாருக்கும்; திரு. தேசிக விநாயகம் பிள்ளை பாடலை வெளியிட அனுமதியளித்த காரைக்குடி, புதுமை பதிப்பகத்தாருக்கும், தம் பாடலை வெளியிட அனுமதியளித்த ஆஸ்தான கவிஞர், திரு. வே. ராமலிங்கம் பிள்ளை அவர்களுக்கும் எம் நன்றி உரித்தாகுக.

ஆசிரியர்களும், அதிகாரிகளும், நிர்வாகிகளும் இப் புத்தகங்களை ஆதரித்து எம்மை இப்பணியில் ஊக்கமுறச் செய்ய வேண்டுகின்றோம்.

மணி. முத்துசாமி,
பதிப்பாளர்.

பொருளடக்கம்

எண்	பாடம்	பக்கம்
1.	அஞ்சலி	1
2.	அணில்	2
3.	இலைகள்	4
4.	உழவன்	6
5.	எருது	8
6.	ஒற்றுமை	10
7.	ஔவையார்	11
8.	படத்தைப் பார்த்து எழுது	13
9.	படத்தைப் பார்த்து விடை கூறு	14
10.	எங்கள் வீடு	15
11.	வட எழுத்துக்கள்	17
12.	படம் பார்த்துப் படி	19
13.	நல்ல கிராமம்	20
14.	நம் நாடு	23
15.	பாப்பா பாட்டு	27
16.	இரு சுடர்	28
17.	வாகனங்கள்	32
18.	எங்கள் தொழில்கள்	36
19.	இராஜாஜி	40
20.	ஆறுகள்	44
21.	கல்வி	48
22.	தென்னைமரம்	49
23.	காலத்தின் அருமை	52
24.	கடிகாரம்	55
25.	ஊக்கமுள்ள காகம்	59
26.	படம் பார்த்துக் கதை சொல்லல்	61
27.	வாழ்க! வாழ்க!...	62
28.	உலக நீதி	63
29.	ஆத்திச்சூடி	64

தமிழ் நாட்டு வாசகம்

இரண்டாம் புத்தகம்

---

1. அஞ்சலி

காந்தியென்னும் பேரொளியே
கருணைமொழி வான்முகிலே
சாந்திநிறை பாத்திரமே
சன்மார்க்க சாத்திரமே
மாந்தருக்குள் மாமணியே
மாநிலத்தின் அற்புதமே
ஏந்துபுகழ் மோகனமே
என்சொல்லி அஞ்சலிப்போம்

நாமக்கல் கவிஞர்

*

2. அணில்

நீங்கள் எல்லோரும் அணிலைப் பார்த்திருப்பீர்கள். அது மரக்கிளைகளில் அங்கும், இங்கும் ஓடும். அணில் எவ்வளவு அழகாக இருக்கிறது? அதன் உடலின் மேற்புறம் வெகு மிருதுவானது. அதன் வாய் மயிர் தூரிகை செய்ய முடியும்.

அணில் ஒரு சிறிய பிராணி. அதற்கு அணிற்பிள்ளை என்றும்

பெயர். எப்போதும் அது களிப்பாக இருக்கும்; சுறுசுறுப்பாகவும் இருக்கும். மரத்தில் உள்ள பழங்களை அது கொறித்துத் தின்னும். அது யாருக்கும் கெடுதல் செய்யாது.

நீங்களும் களிப்பும், சுறுசுறுப்பும் உடையவர்களாக இருப்பீர்களா?

பிராணி	கொரித்து	சுறுசுறுப்பாக
கெடுதல்	களிப்பாக	மரக்கிளை
அழகாக	மிருதுவாக	அங்கும் இங்கும்
மேற்புறம்	அணிற்பிள்ளை	தூரிகை

பயிற்சி

1. படத்தில் நீ என்ன பார்க்கிறாய்?
   படத்தில் நான் ஒரு ——— ———.
2. அது என்ன செய்கிறது?
   அது ஒரு ——— ———.
3. அது எங்கே உட்கார்ந்து இருக்கிறது?
   அது ——— ——— உட்கார்ந்து இருக்கிறது.
4. அணில் யாருக்கும் கெடுதல் செய்கிறதா?
   அணில் ——— ——— ———.



3. இலைகள்

தாவர வகைகளுக்கு அழகு கொடுப்பன இலைகள். இலைகள் பொதுவாகப் பசுமை நிறம். அந் நிறம் காட்சிக்கு இனியவை. பசும் புல் தரைகளையும், பசுமையான பயிர் வயல்களையும் பாருங்கள். அவைகள் எவ்வளவு அழகாய் இருக்கின்றன.

மரத்திற்கு இலைகள் வேறு வகையிலும் உதவுகின்றன. சூரிய வெளிச்சம் இலைகளின் வழியாகவே மரத்திற்குப் பரவுகிறது. தாவரங்கள் இலைகளின் வழியாகச் சுவாசிக்கின்றன.

இலைகள் மனிதருக்கும் பல வகைகளில் உபயோகப்படும். உண்கலமாக உதவுவன சில; உணவுப் பொருள்களாக உதவுவன பல; பச்சிலைகள் பல மருந்துப் பொருள்கள் ஆகும்.

தாவரம்	இனியவை	சுவாசிக்கின்றன
காட்சி	பசும்புல்	உண்கலமாக
பழுப்பு	வடிவம்	மருந்துபொருள்
சருகு	பரவுகிறது	பச்சிலைகள்

பயிற்சி

1. ஐந்து வகையான இலைகள் சொல்லு.
2. இவை எதற்கு உதவும்?

வாழை இலை, வேப்பிலை, முளைக்கீரை.



4. உழவன்

உழுபவர்கள் உழவர்கள். அவர்கள் பயிர்த் தொழில் செய்கிருர்கள். உணவுப் பொருள்களை உற்பத்தி செய்கிருர்கள். எல்லோருக்கும் உணவுப் பொருள்கள் வேண்டும். உணவு இல்லாமல் உயிர் வாழமுடியாது. எல்லோருக்கும் உழவர்கள் உபகாரம்

செய்கிறார்கள். உழவர்களின் உழைப்பை எல்லோரும் பாராட்ட வேண்டும். உழவன் யாருக்கும் அடிமை இல்லை. அவன் சுதந்திர வாழ்க்கை உடையவன். உழுது உண்டு வாழ்வது உயர்வான வாழ்வு. உழவுத் தொழில் அழிவு இல்லாதது.

"பூமி திருத்தி உண்."
"சீரைத் தேடின் ஏரைத் தேடு."

உழைப்பை	உழவர்	உபகாரம்
பயிர்த் தொழில்	அடிமை	பாராட்ட
சுதந்திர வாழ்க்கை	உற்பத்தி	திருத்தி
உணவுப்பொருள்	உயர்வு	சீர்
உயிர் வாழ	அழிவு	ஏர்

பயிற்சி

1. எது உயர்வான வாழ்வு?
2. எது அழிவில்லாத தொழில்?
3. கோடு உள்ள இடத்தில் சரியான சொற்களைச் சேர்.

———— ———— யாரும் வாழமுடியாது.

உழவன் ———— ———— உற்பத்தி செய்கிறான்.



5. எருது

உழவர்களுக்கு உதவுவன எருதுகள். எருது ஏர் இழுத்துச் செல்கின்றது. அதற்கு உழவுமாடு என்றும் பெயர். உழவுமாடுகள் இல்லாமல் உழவன் இருக்க முடியாது. உழவனுக்கு எருது தான் செல்வத்தை அளிக்கிறது; அதுவும் ஓர் செல்வம் ஆகும்.

உழவு இல்லாதபோது அது வண்டியை இழுக்கும். கிராமங்களின் எருது பூட்டின வண்டியை பிரயாணத்திற்கு உபயோகிக்கின்ருர்கள். இவ்வாறு உதவும் எருதுகளை இதமாக வளர்க்கவேண்டும்.

உழவுமாடு	இழுத்துச்செல்லும்
செல்வம்	இல்லாதபோது
இதமாக	வளர்க்கவேண்டும்
உதவுவன	உபயோகிக்கிருர்கள்
பூட்டின	அளிக்கிறது

பயிற்சி

சொற்களை கூட்டிப்படி



உழவனுக்குச் ——————— .

——————— உழும்.

வண்டியும் ——————— .

களை ——————— வளர்க்கவேண்டும்.

———

6. ஒற்றுமை

ஒரு சுள்ளிக் கட்டு இருக்கிறது.

ஒரு தனிக் குச்சியும் இருக்கிறது.

தனிக் குச்சியைச் சுலபமாய் ஒடிக்கலாம்.

கட்டை ஒடிக்க ஒருவராலும் ஆகாது.

குச்சிகள் பல சேர்ந்து இருப்பதால் கட்டிற்கு பலம்.

சேர்ந்து வாழ்வது வலிமையாகும்.

ஒற்றுமை என்பது சேர்ந்து வாழ்வதே.

கட்டு	தனிக்குச்சி	சேர்ந்து வாழ்வது
ஒடிக்க	ஒற்றுமை	வலிமை

7. ஒளவையார்

ஒளவைப் பாட்டியின் பெயர் எல்லோருக்கும் தெரியும். அவர் தமிழ்நாட்டில் வாழ்ந்தார். அவர் கல்வியிற் சிறந்த அம்மையார்; இரக்கமும், அன்பும் உடையவர்; உதவி செய்யும் குணமும் உடையவர்; யாவரையும் சமமாக எண்ணுவார்.

ஔவை வாக்கு நல்ல வாக்கு. அவர் பல நூல்களை எழுதி இருக்கிறார்; சிறுவர்களுக்காகவும் எழுதியிருக்கிறார். ஆத்திசூடி, கொன்றை வேந்தன், மூதுரை, நல்வழி, முதலியன ஔவை எழுதிய நூல்கள்.

ஔவை எழுதிய நூல்களை நீங்கள் படிக்கவேண்டும். அவைகளில் சொல்லியபடி நடக்கவேண்டும். ஔவையார் செருக்கு இல்லாதவர்.

நூல்கள்	நல்ல வாக்கு	அம்மையார்
இரக்கம்	சமமாக	எண்ணுபவர்
அன்பு	வாழ்ந்தார்	நல்லறிவு
செருக்கு	தமிழ்நாட்டில்	நன்றி

கேள்விகள்

1. ஔவையார் என்னென்ன குணங்கள் உடையவர்?
2. ஔவையார் எழுதிய நூல்கள் சில சொல்லு.

8. படத்தைப் பார்த்து எழுது

இது ஒரு——————.

பிள்ளைகள்——————.

ஒருவன் கண்ணைக்——பிடிக்கிறான்.

மற்றவர்கள்——————.

உபாத்தியாயர்——————.

அவர்——————கவனிக்கிறார்.

விளையாடும் இடம்.	விளையாடுகிறார்கள்.
கட்டிக்கொண்டு.	ஓடுகிறார்கள்.
நிற்கிறார்.	விளையாட்டை.



9. படத்தைப் பார்த்து விடை கூறு

உபாத்தியாயர் என்ன செய்கிறார்?

பிள்ளைகள் என்ன செய்கிறார்கள்?

ஒருவன் ஏன் நிற்கிறான்?

பையன்கள் எத்தனை பேர் இருக்கிறார்கள்?

பெண்கள் எத்தனை பேர் இருக்கிறார்கள்?



10. எங்கள் வீடு

இது எங்கள் வீட்டின் படம். எங்கள் வீடு மச்சு வீடு. 'சிறுகக் கட்டிப் பெருக வாழ்' என்பார்கள். ஆகையால் எங்கள் வீடு சிறிய வீடு.

எங்கள் பெற்றோர்களும் குழந்தைகளுமாக வசிக்கிறோம். என் பெற்றோருக்கு நான் மூத்த மகன், எனக்கு ஒரு தம்பியும், ஒரு தங்கை யும் இருக்கிறார்கள். என் தம்பிக்கு

வயது மூன்று என் தங்கை சிறு குழந்தை. எனக்கு ஒரு அத்தையும் உண்டு.

எங்கள் தாயார் உணவு அளித்து எங்களை வளர்க்கிறாள். தகப்பனார் புத்தகமும், உடையும், மற்றப் பொருள்களும் வாங்கித் தருகிறார். பெற்றோர் சொற்படி நான் நடப்பேன்.

எங்கள் வீட்டின் பின்புறம் ஒரு சிறு தோட்டமும் இருக்கிறது. அதில் பழ மரங்கள் இருக்கின்றன. தம்பியும் நானும் பழங்களைத் தின்போம்.

மச்சு	பெற்றோர்	தின்போம்
சிறுக	குழந்தை	தருகிறார்
பெருக	வாழ்	வசிக்கிறோம்
தம்பி	தோட்டம்	உடை
தங்கை	சொற்படி	வளர்க்கிறாள்
மூத்த	அளித்து	பின்புறம்

11. வட எழுத்துக்கள்

ஜ	ஸ	ஷ	ஹ	க்ஷ
ஜா	ஸா	ஷா	ஹா	க்ஷா
ஜி	ஸி	ஷி	ஹி	க்ஷி
ஜீ	ஸீ	ஷீ	ஹீ	க்ஷீ
ஜு	ஸு	ஷு	ஹு	க்ஷு
ஜூ	ஸூ	ஷூ	ஹூ	க்ஷூ
ஜெ	ஸெ	ஷெ	ஹெ	க்ஷெ
ஜே	ஸே	ஷே	ஹே	க்ஷே
ஜை	ஸை	ஷை	ஹை	க்ஷை
ஜொ	ஸொ	ஷொ	ஹொ	க்ஷொ
ஜோ	ஸோ	ஷோ	ஹோ	க்ஷோ
ஜௌ	ஸௌ	ஷௌ	ஹௌ	க்ஷௌ
ஜ்	ஸ்	ஷ்	ஹ்	க்ஷ்

புஸ்தகம் ஸ்ரீ ஸீதா

வருஷம் ஜனவரி

திராஷை ஜீவன்

கக்ஷி ஜானகி

ஹாரம் ஜோடி

ஸுந்தரி க்ஷேமம்


1
2
3
4
5
6

12. படத்தைப் பார்த்துப் படி

1. ஒரு சிங்கம் படுத்துத் தூங்குகிறது. அதன் முதுகின்மேல் ஒரு எலி ஓடுகிறது.

2. சிங்கம் எலியைப் பிடித்து நசுக்கப் பார்க்கிறது.

3. சிங்கம் எலியை விட்டுவிட்டது. அது சந்தோஷமாய் ஓடுகிறது.

4. சிங்கம் ஒரு வலையில் அகப்பட்டுக்கொண்டது.

5. எலி அவ்வலையை அறுக்கிறது.

6. சிங்கம் விடுதலை அடைந்தது. எலியும் சிங்கமும் பேசுகின்றன.

பயிற்சி

இப்போது இந்தக் கதையைச் சொல்லு.



13. நல்ல கிராமம்

நான் ஒரு கிராமத்திற்குச் சென்றேன். அது ஒரு நல்ல கிராமம். அதனால் அதற்கு நல்லூர் என்றே பெயரும் வழங்குகிறது. ஏன் அதை நல்ல ஊர் என்று சொல்லவேண்டும்?

முதலில் பார்ப்பதற்கே ஊர் அழகாக இருந்தது. அழகு

என்றால் என்ன? பெரிய மாளிகை களா? இல்லை. மச்சு வீடுகள் குறைவாகவே இருந்தன. குச்சு வீடுகளே அதிகம் இருந்தன.

ஊர் சுத்தமாக இருந்தது. வீடுகள் ஒழுங்காகக் கட்டப் பட்டிருந்தன.

பள்ளிக்கூடம், கோவில், சாவடி, சந்தைப் பேட்டை, ஆகிய எல்லா நலன்களும் அவ்வூரில் ஏற் பட்டிருக்கின்றன. எல்லாப் பிள்ளை களும் படிக்கிறார்கள். பெற்றோர் கள் பள்ளிக்கூடத்தை ஆதரிக்கிறார் கள். ஆசிரியர்கள் உண்மையாக உழைக்கிறார்கள்; மேன்மையாக வாழ்கிறார்கள். அதிகாரிகள் வந் தால் சாவடியில் தங்குகிறார்கள். அங்கே எல்லா வசதிகளும் இருக்

கின்றன. பொது பேச்சுக்கள் மந்தை வெளியில் நடக்கும்.

குடிகள் வாய்தாவில் பாக்கி நிறுத்துவதில்லை. வழக்குகள் என்பன அவ்வூரில் காணபட வில்லை. கிராம அதிகாரிகளும், குடிகளும் ஒத்து நடக்கிறார்கள்.

மாளிகை	மச்சுவீடு	குச்சுவீடு
பெற்றோர்	வாழ்கிறார்கள்	ஆதரிக்கிறார்கள்
அதிகாரி	மந்தைவெளி	கட்டுப்பாடு
வாய்தா	நாகரிகம்	குடிகள்
நேசிப்பவர்	விருந்தினர்	நீர்தேக்கம்
மரியாதை	உழைப்பாளி	குப்பைக்குழி

கேள்விகள்

1. நல்லூர் எப்படிப்பட்ட ஊர்?
2. வீடுகள் எப்படி இருந்தன?
3. அந்த ஊரில் என்னென்ன நலன்கள் இருந்தன?

பயிற்சி

உங்கள் ஊரில் இருக்கிறதா? இல்லையா?

பள்ளிக்கூடம் ———. கோவில் ———. சாவடி. சந்தைப் பேட்டை. மந்தைவெளி.



14. நம் நாடு

பாரத தேசம் நம் நாடு ஆகும். முன்னொரு காலத்தில் பரதன் என்றொரு அரசன் இந்நாடு முழுவதும் ஆண்டு வந்தான். அவன் பல மேன்மைகள் பொருந்தியவன். ஆகையால் அவனுடைய பெயராலேயே நாடும் வழங்குவதாயிற்று. பாரத தேசத்திற்கு இந்தியா என்

பது பிற்காலத்தில் ஏற்பட்ட பெயர். அப்பெயரே இப்போது எங்கும் பரவி வழங்குகிறது. இந்தியாவில் வாழ்கின்ற நாம் இந்தியர்கள்.

இந்தியா மிகப் பரந்த தேசம். மலைகள், ஆறுகள், கடற்கரை, வயல்கள், காடுகள் ஆகிய எல்லா வசதிகளையும் உடையது நம் நாடு. நம் நாட்டின் வடக்குப் பகுதி வட இந்தியா என்றும், தெற்குப் பகுதி தென்னிந்தியா என்றும் வழங்கப் படும்.

தென்னிந்தியா மூன்று பக்க மும் கடலால் சூழப்பட்டது. தெற்கில் இருப்பது இந்தியப் பெருங் கடல்; மேற்கில் இருப்பது அரபிக் கடல்; கிழக்கில் இருப்பது வங்காள விரிகுடா. தென்னிந்தியாவின்

தெற்குக் கோடிக்குக் குமரிமுனை என்று பெயர். கோதாவரி, கிருஷ்ணா, காவேரி, தென்பெண்ணை பாலாறு, வைகை, என்பன, தென்னிந்தியாவின் பெரிய ஆறுகள். தெலுங்கு. கன்னடம், மலையாளம், துளுவம் என்பன தென்னிந்திய மொழிகள். இம் மொழிகளில் முதன்மையானது தமிழ். தமிழ் வழங்கும் பகுதி தமிழ் நாடு எனப்படும். தமிழ் பேசுகிறவர்களாகிய நாம் தமிழர்கள்.

தமிழர்கள் உண்மையும், ஆற்றலும் உடையவர்கள். கல்வி, தொழில் விவசாயம் இவைகளிலும் தமிழர்கள் சிறந்தவர்களே. இந்தியாவின் பெருமைக்குத் தமிழர்கள் அடிப்படையாக விளங்கவேண்டும்.

இந்தியர்கள் எல்லோரும் ஒற்றுமையாக வாழவேண்டும்.

பாரதநாடு	மேன்மை	சூழப்பட்டது
இந்தியா	செழிப்பு	விரிகுடா
இந்தியர்	பரப்பு	வளைகுடா
பகுதி	மொழி	பெருங்கடல்
ஆற்றல்	பெருமை	அடிப்படை

கேள்விகள்

1. நம் நாட்டிற்கு வழங்கிய பழம் பெயர் எது? இப்போது வழங்கும் பெயர் எது?

2. தென்னிந்தியாவில் வழங்கும் மொழிகள் எவை யெவை?

3. தமிழர்கள் எவ்வெவ் வகைகளில் பெருமை உடையவர்கள்?

பயிற்சி

தமிழ் வழங்கும் நாடு தமிழ் நாடு. தமிழ் பேசுகிறவர்கள் தமிழர்கள். இம்மாதிரியே பின் கண்டவைகளையும் முடி.

தெலுங்கு வழங்கும் நாடு———. தெலுங்கு பேசுகிறவர்கள்———. கன்னடம் வழங்கும் நாடு———. கன்னடம் பேசுகிறவர்கள்———. மலையாளம் வழங்கும் நாடு———. மலையாளம் பேசுகிறவர்கள்——————.

15. பாப்பா பாட்டு

1. ஓடி விளையாடு பாப்பா,—நீ
ஓய்ந்திருக்க லாகாது பாப்பா,
கூடி விளையாடு பாப்பா,—ஒரு
குழந்தையை வையாதே பாப்பா.

2. காலை யெழுந்தவுடன் படிப்பு—பின்பு
கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு
மாலை முழுதும் விளையாட்டு—என்று
வழக்கப் படுத்திக் கொள்ளு பாப்பா.

3. பொய் சொல்லக்கூடாது பாப்பா—என்றும்
புறஞ் சொல்ல லாகாது பாப்பா,
தெய்வம் நமக்குத் துணை பாப்பா—ஒரு
தீங்கு வர மாட்டாது பாப்பா.

4. சாதிகள் இல்லையடி பாப்பா ; —குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம் ;
நீதி, உயர்ந்த மதி, கல்வி—அன்பு
நிறைய உடையவர்கள் மேலோர்.

5. உயிர்களிடத்தில் அன்பு வேணும்—தெய்வம்
உண்மை யென்று தானறிதல் வேணும்
வயிரமுடைய நெஞ்சு வேணும் ; —இது
வாழும் முறைமையடி பாப்பா.

மகாகவி பாரதியார்



16. இரு சுடர்

இரவியும், மதியும் இரு சுடர்கள் எனப்படும். இரவி என்பது சூரியன்; மதி என்றால் சந்திரன். உலகிற்கு வெப்பமும், வெளிச்சமும் அளிப்பது சூரியனே. சூரியனை நாம் காண்கிற நேரமே பகல் எனப்படும். சூரியனைக் காண முடியாத காலம் இரவு எனப்

படும். ஒரு பகலும், ஓர் இரவும் சேர்ந்தது ஒரு நாள் ஆகும்.



இரவில் சந்திரன் நமக்கு ஒளியைத் தருகிறது. சந்திர ஒளிக்கு நிலா என்று பெயர். நிலா குளிர்ச்சி தரும். சந்திரனுக்குச் சுய ஒளி கிடையாது. சூரியப் பிரகாசமே சந்திரன்மேல் படுகிறது; அவ்வொளியே பூமியில் திரும்ப வீசுகிறது.

சந்திரன் தினமும் ஒரே அளவாகத் தோன்றாது; நிலாவும் தினமும் முழு இரவு தெரிகிறதில்லை. சில நாட்களில் மதியின் வடிவம், நிலாவும் வளர்ந்துகொண்டே வரும்; சில நாட்களில் அவை குறைந்துகொண்டே வரும். அவற்றிற்கு முறையே வளர்பிறை, தேய்பிறை என்று பெயர். ஒரு மாதத்தில் பதினைந்து நாட்கள் வளர்பிறை; பதினைந்து நாட்கள் தேய்பிறை.

தேய் பிறையின் கடைசிநாள் அமாவாசை. அன்று இரவு சந்திரனே தோன்றாது; வளர் பிறையின் கடைசிநாள் பௌர்ணமி. அன்று இரவு முழுவதும் நிலா வீசும்; சந்திரன் முழுவடிவமும் தெரியும்.

சூரியனும், சந்திரனும் காலப்படித் தோன்றுகின்றன; காலப்படி மறைகின்றன. வேற்றுமை இல்லாமல் எல்லாப் பிராணிகளுக்கும் ஒளியும் வெப்பமும், தப்பமும் உதவுகின்றன.

இரவி	சுய ஒளி	வளர் பிறை
மதி	பிரகாசம்	தேய் பிறை
இருசுடர்	வெப்பம்	அமாவாசை
பகல்	தட்பம்	பௌர்ணமி
இரவு	வேற்றுமை	உதவவேண்டும்

கேள்விகள்

1. இரு சுடர்கள் என்பன எவை?
2. சூரியன் எவற்றை உதவுகின்றது?
3. எந்தநாள் அமாவாசை? என்று முழு நிலா தெரியும்?

பயிற்சி

கோடுகள் உள்ள இடங்களை நிரப்பு:—

சூரியன் ——— நேரம் பகல். சூரியன் ——— நேரம் இரவு. அமாவாசையில் சந்திரனே ———. ——— அன்று முழு நிலா தெரியும்.



17. வாகனங்கள்

முதன் முதலில் மனிதர்கள் கால்நடையாகப் பிரயாணம் செய்தார்கள். பிறகு எருது குதிரை முதலிய மிருகங்களை வாகனங்களாகக் கொண்டார்கள். எருதுகளின்மேல் பொதிகளை ஏற்றிச் சென்றார்கள். குதிரைகளின்மேல் ஏறிச் சவாரி செய்தார்கள்.

பிறகு எருது, குதிரைகளைப் பூட்டிய வண்டிகள் வாகனங்களாக ஏற்பட்டன. அவற்றுள் இரட்டை மாட்டுக் கட்டை வண்டிகள் மிகப் பழமையானவை. ஒற்றை மாட்டு வண்டி. வில் வண்டி, ஒற்றைக் குதிரை வண்டி. இரட்டைக் குதிரை வண்டி எனப் புதிய பல வாகனங் கள் தோன்றின.

அறிவு வளர வளர வாகன வகைகளும் விசித்திரமாக வளர்ந்தன.

நீராவியந்திரம் கண்டுபிடிக் கப்பட்டது. பெரிய வண்டித் தொடரை அது இழுத்துச் செல் கிறது. என்ன வேகத்துடன் செல்கிறது! பலநூறு மக்களை ஏற்றிச் செல்கிறது; ஏராளமான பொருள்களையும் ஏற்றிச் செல் கிறது. எவ்வளவு அதிசயம் இது!

பிறகு விதம் விதமான மோட்டார் வண்டிகள் தோன்றின. சிறிய மோட்டார்கள், பெரிய மோட்டார்கள் பஸ்வண்டிகள் இலாரிகள் என்று அவற்றில் எத்தனை வகை? செல்வம் உடையவர்கள் தனியான கார்கள் வைத்துக்கொள்கிறார்கள். மற்றவர்கள் வாடகை பஸ்வண்டிகளில் ஏறிச் செல்கிறார்கள். இலாரிகள் சாமான்களை ஏற்றிச் செல்ல உபயோகப்படுகின்றன. நீரில் செல்லும் நீராவிக் கப்பல்கள் ஏற்பட்டன. ஏராளமான மனிதர்கள் கப்பலில் ஏறிக் கடலில் பிரயாணம் செய்கிறார்கள். சாமான்களும் கப்பலில் ஏற்றிச் செல்லப்படுகின்றன. நொடியில் பறக்கும் ஆகாய விமானங்கள் பரவின. விமானம் பறக்கும்போது எல்லோரும் பார்ப்

பார்கள். ஆகாயவிமானங்கள் வெகு விரைவாகப் பறந்து செல்லும். தபால்களும் விமானங்களில் அனுப்பப்படுகின்றன. மனிதர்களும் அதில் ஏறிச் செல்கிறார்கள்.

வாகனம்	மலைவாசி	கோவேறுகழுதை
பிரயாணம்	பாலைநிலம்	பொதிஎருது
பூட்டி	வில்வண்டி	விசித்திரமாக
சுழற்றும்	நொடியில்	நீராவியந்திரம்
விசை	விமானம்	மின்சார இயக்கம்
அதிசயம்	ஏராளமான	பலநூறு

கேள்விகள்

1. வாகனங்களாக உதவும் மிருகங்கள் எவையெவை?
2. மிகப் பழமையான வண்டி எது?

பயிற்சி

உனக்குத் தெரியுமா?
வண்டி ஓட்ட, சைகிள் விட.
நீ பார்த்திருக்கிறாயா?
ஆகாய விமானம், இரயில் வண்டி, கப்பல்.
உங்கள் வீட்டில் இருக்கிறதா?
கட்டை வண்டி, குதிரை வண்டி, எருது,

18. எங்கள் தொழில்கள்

நாங்கள் சிறு கிராமவாசிகள். பயிர் செய்வது எங்கள் முக்கியத் தொழில். அதிகாலையில் நாங்கள் வயலுக்குச் செல்வோம். வெயில் ஏறுமுன் வேலையை முடிப்போம். பிறகு வீட்டிற்கு வருவோம். இரவில் நாங்கள் பயிர்களைக் காவல் காப்போம். குடும்பத்தார் எல்லாரும் ஒற்றுமையாகப் பாடு படுவோம்; ஆளுக்கொரு வேலை செய்வோம்.

ஆடியில் நாங்கள் உழவு ஆரம்பிப்போம். வருடக் கடைசியில் எல்லா வேலைகளும் முடியும். கோடை எல்லாம் எங்களுக்கு ஓய்வு. பெண்களுக்குத் தினமும் சிறிது நேரம் ஓய்வு உண்டு. வயது

முதிர்ந்தவர்களுக்கும் ஓய்வு அதிகம் உண்டு.

ஓய்வு நேரத்தையும் நாங்கள் வீணாக்கமாட்டோம். சிறு தொழில்கள் பற்பல செய்வோம்.

எங்கள் தொழில்கள் என்னென்ன?



நார்கள் பல வகை உண்டு. தாழை நார், கற்றாழை நார், புளிச்ச நார், தேங்காய் நார் முதலியன. அவைகளைக்கொண்டு கயிறுகள்

திரிப்போம். மணிக்கயிறு, தாம்புக் கயிறு, தும்புக்கயிறு என்று பற்பல வகைகள் திரிப்போம்.

ஓலை கொண்டு கீற்று முடைவோம்; மூங்கில் சீவிக் கூடை முறம் கட்டுவோம்; ஓலைகள் பின்னுவோம்; ஓலைப் பெட்டிகள் பற்பல வகை செய்வோம். கோரை கொண்டு பாய்கள் நெய்வோம். மட்டப் பாயும், பட்டுப் பாயும் எல்லாம் செய்வோம்.

மண்ணைக் கொண்டு பொம்மை செய்தே. வர்ணமிட்டு, விற்றுப் பிழைப்போம். கோழி, வாத்து வளர்த்துத், தினமும் முட்டை விற்றுக் காசு சேர்ப்போம். ஆடுகள் மேய்த்து, இனத்தைப் பெருக்கி நல்ல விலையில் அவற்றை விற்போம்.

உழவும், பற்பல உழைப்பும் செய்து உன்னதமாக வாழ்கின்றோமே.

கிராமவாசி	திரிப்போம்	முக்கியத் தொழில்
அதிகாலை	முடைவோம்	பாடுபடுவோம்
வருஷக்கடைசி	நெய்வோம்	ஆரம்பிப்போம்
கோடை	பின்னுவோம்	வீணுக்க
ஓய்வு	வர்ணமிட்டு	பஞ்சம்
மணிக்கயிறு	தும்புக்கயிறு	உன்னதமாக

கேள்விகள்

1. இப்பாடத்தில் வரும் தொழில்கள் என்னென்ன?
2. இவர்கள் எப்படி வாழ்கிறார்கள்?
3. உழவு ஆரம்பம் எப்போது? ஆண்களுக்கு ஓய்வு எப்போது?

பயிற்சி

1. ஓலையால் பெட்டிகள் பின்னலாம். ஓலை பின்னுவது ஒரு குடிசைத் தொழில்.

(இதே மாதிரி எழுது)

2. நார்களால்———————————
3. ஓலைகளால்———————————
4. மண்ணினால்———————————

———



19. இராஜாஜி

இராஜாஜியின் பெயரை அறியாதவர்கள் இல்லை. அவருடைய முழுப் பெயர் சக்கரவர்த்தி இராஜ கோபாலாச்சாரியார் என்பது. அவர் நம் தமிழ் நாட்டினர். அவர் ஓர் எளிய குடியில் பிறந்தார். நன்றாகப் படித்தார்; வக்கீலாக வந்தார்.

வக்கீல் வேலையில் அவர் திறமை யாக விளங்கினர். செல்வப் பெருக் கால் அவர் மகிழவில்லை. தேச சேவையை விரும்பினர். நாட் டிற்கே உழைக்க முற்பட்டார். தலைவருள் ஒருவராக உயர்ந்தார். காந்தியின் அன்பர் ஆனர்.

சுதந்திரப் போரில் நின்ருர். துன்பங்களைக் கண்டு அஞ்ச வில்லை. பொருள் ஈட்டுவதை விட்டார். விடுதலை பெறவே விரும் பினர். பலமுறை சிறை சென்ருர். சிறையிலும் சுதந்திரச் சிந்தையே கொண்டார்.

அவர் பெருமையை நாடு உணர்ந்தது. தேசமெங்கும் அவர் புகழ் பரவிற்று. அவருடைய யோசனைகளே சிறப்பாக விளங்கின. முடிவில் சுதந்திரம் கிட்டியது.

இந்திய அரசாங்கம் இந்தியர் கையில் வந்தது.

அரசியல் காரியங்களை நடத்துவது இலேசானதா? ஆட்சி செய்வதற்கு நல்ல அறிவு வேண்டும்; சாமர்த்தியம் வேண்டும்; தந்திரம் வேண்டும். இம்மூன்று தன்மைகளும் உடையவர் இராஜாஜி. அவரையே கவர்னர் ஜெனரலாக நாடு விரும்பியது. அவர் பொறுமை உடையவர்; அவசரப்பட்டு எதையும் செய்யமாட்டார்; ஆழ்ந்த யோசனை உடையவர்; பகையாகப் பேசுவோரையும் இதமாக நேசிப்பார்.

இராஜாஜியின் ஆட்சியால் நாட்டிற்கு நன்மை. தமிழர்

ஒருவர் இந்தியாவை ஆள்வது நமக்குப் பெருமை யல்லவா?

முழுப்பெயர்	தமிழர்	முற்பட்டார்
சுதந்திரப்போர்	திறமையாக	அஞ்சவில்லை
திறமை	வக்கீல்	செல்வப்பெருக்கு
தேசசேவை	தலைவர்	விடுதலை
சிறை	சிந்தை	கிட்டியது
ஆட்சி	ஆழ்ந்த	இதமாக

கேள்விகள்

1. இராஜாஜி எந்த நாட்டினர்?
2. இப்போது அவர் என்ன வேலையில் இருக்கிறார்?
3. அவர் எப்படிப்பட்ட குணங்கள் உடையவர்?

பயிற்சி

1. உனக்குச் சாமர்த்தியம் உண்டா?

படிப்பில், பேச்சில், விளையாட்டில்.

2. விரும்புவேன், விரும்பமாட்டேன் என்று சொல்.

சோம்பலை, உழைப்பை, படிப்பை, பகையை, நட்பை, சுகத்தை, துன்பத்தை, நல்ல பேச்சை.



20. ஆறுகள்

ஆ, என்ன அழகு! எவ்வளவு இனிய காட்சி! எங்கோ மலையில் மழை மிகுதியாகப் பெய்கிறது. நீர்க்கால்கள் பல்லாயிரம் ஏற்படுகின்றன. கீழே பாய்கின்றன. ஒன்று சேர்கின்றன. சமநிலத்தில் ஆறுகப் பெருகுகின்றன.

ஓ வென்று இரைகின்றது. நுரையும் திரையுமாக வெள்ளம்

வருகின்றது. கற்கள் உருண்டு உருண்டு உடைகின்றன; நொறுங்கி நொறுங்கி மணலாக நிறைகின்றன. மரங்கள், மட்டைகள் மிதந்து வருகின்றன.

உழவர்களுக்கு என்ன மகிழ்ச்சி! ஊராருக்கு என்ன உற்சாகம்! அணைகள் கட்டி நீரைத் தேக்கி, ஏரிகள் குளங்களை நிரப்புகிறார்கள். வாய்க்கால் வெட்டி, நீரைப் பிரித்து, வயல்களில் பாய்ச்சி உழுகிறார்கள். ஊர்கள் தோறும் துறைகள் செய்து, குளித்துத் துவைத்து மகிழ்கிறார்கள்.

எத்தனை மீன்கள்! சிறிய மீன்கள், பெரிய மீன்கள், ஓரமாக ஓடி ஆடுகின்றன. எச்சிலும் அழுக்கும் தின்று நீரைச் சுத்தம் செய்கின்றன.

ஆற்றங்கரையில் மாலை வேளையில் உட்காருவது எவ்வளவு ஆரோக்கியம்! கரையில் எங்கும் சோலைகளாக இருக்கின்றன. துறைகளில் பரந்த இடம்; படிக்கட்டு; அரசமரம், வேப்பமரம், நல்ல காற்று.

மலையிலிருந்து உற்பத்தியாகிறது; சமநிலத்தில் பாய்கிறது; பல ஊர்களுக்கும் செழிப்பை அளிக்கிறது; கடைசியில் கடலில் கலக்கிறது.

ஆறுகள் ஊருக்கு அழகு. ஆற்றோரத்தில் உள்ள ஊர்கள் கரைவெளி எனப்படும். ஆறுகளின் வளத்தால் நாட்டில் செல்வம் வளரும்.

பாய்கின்றன	ஒன்றுசேர்கின்றன
கடல்	கரைவெளி
நீர்க்கால்	பெருகுகின்றன
சமநிலம்	நுரையும்திரையும்
மகிழ்ச்சி	அணைகள்
உற்சாகம்	துறைகள்
படிக்கட்டு	ஆற்றங்கரை

கேள்விகள்

1. மணல் எப்படி உண்டாகிறது?

2. வெள்ளம் எப்படி வருகின்றது?

3. ஆறுகள் எங்கே உண்டாகின்றன? எங்கே முடிகின்றன?

பயிற்சி

1. ஆறு —— மாலை —— இரண்டு அருத்தம் கூறு.

ஐந்தும் ஒன்றும் ஆறு. பூ மாலை.

காவிரி ஆறு. மாலை நேரம்.

2. மட்டை மிதக்கும். கல் மிதக்காது. அது அமிழும். இதேமாதிரி சொல்லு. ஓடம்——வண்டி —— இரும்பு——தக்கை.

சரியாக முடித்துப் படி

3. ஆற்றில்	தண்ணீர்	ஓடும்.
வாய்க்காலில்	————	————.
குளத்தில்	————	————.
கிணற்றில்	————	————.

21. கல்வி

மக்கள் அறிவை வளர்ப்பது கல்வி.
மக்கள் அறிவை விளக்குவதும் கல்வி.
சிறுவர் சிறுமியர் பற்பல வகையினர்
பள்ளி சென்று கற்பதும் கல்வி.
இயற்கை அழகைக் கண்ணால் கண்டு
களித்து வளரும் உண்மையும் கல்வி
பெரியோர் சொல்லும் உண்மை கேட்டு
அறிவைப் பெறுதல் அனைத்தும் கல்வி.
தொழில்கள் கற்றே தூய்மை யாக
வாழ்வைப் பெருக்கி வாழ்வதும் கல்வி.
கல்வி ஒன்றே அழியாச் செல்வம்.
கற்றோர் தாமே மேலோர் ஆவர்.

நாகராஜ ராவ்

கேள்விகள்

1. அழியாச் செல்வம் எது?
2. யார் மேலோர் ஆவர்?

பயிற்சி

கோடுகளை நிரப்பு

கல்வி மக்கள் அறிவை ________ .
கல்வி மக்கள் அறிவை ________ .
________ கல்வி வாழ்வைப் பெருக்கும்.

22. தென்னைமரம்

பிள்ளைகளே நீங்கள் எல்லோரும் என்னைப் பார்த்திருக்கிறீர்கள். என் பெயர் என்ன? குடியானவன்



ஒரு முற்றின நெற்றுத் தேங்காயைக் கொண்டுவந்தான். அதைப் பூமியில் நட்டான். அதிலிருந்து நான் முளையாகக் கிளம்பினேன். பிறகு நான் பிள்ளையாக

வளர்ந்தேன். நாளடைவில் ஓர் உயர்ந்த மரமாக ஆனேன்.

குடியானவன் என்னை நீர் வார்த்து வளர்த்தான். இப்போது நான் இனிய இளநீரைக் கொடுக்கிறேன். பலவகைகளில் நான் மனிதருக்குப் பயன்படுகிறேன்.

வீட்டிற்குத் தூணாக நான் நிற்பேன்; விட்டமாகவும் நான் உதவுவேன். என் மட்டையிலிருந்து கீற்றுகள் முடையலாம். குலைகுலையாகக் காய்களையும் உங்களுக்குக் கொடுக்கிறேன். தேங்காயிலுள்ள பருப்பு ஓர் இனிய உணவுப் பொருள். அதைச் செக்கிலிட்டு எண்ணெய் எடுக்கப்படுகிறது.

கொட்டாங்கச்சியும் வீணாகிறதில்லை. அது அடுப்பு எரிக்கவும், அகப்பை செய்யவும் உதவும்.

காயின் மேல்மட்டையையும் அடுப்பு எரிக்கலாம். மட்டையிலுள்ள நாரினால் கயிறு திரிக்கிறார்கள்.

நான் எத்தனை வகைகளில் உங்களுக்கு உதவுகிறேன் பார்த்தீர்களா? நீங்களும் உலகிற்கு உதவியாய் வாழவேண்டும்.

முற்றின	குடியானவன்	மூட்டலாம்
கிளம்பி	குலைகுலையாக	காய்க்கின்றன
வார்த்து	செக்கிலிட்டு	வாழவேண்டும்
கீற்று	முளையாக	விசிறி
தூண்	திரிக்கிறார்கள்	மட்டை
கயிறு	வீணாகிறதில்லை	நட்டான்

ஆவணக்காப்பக சென்னை-600 008

கேள்விகள்

1. கீற்றுகள் எதிலிருந்து முடையப்படுகின்றன?
2. தென்னை மட்டை எதற்கு உதவும்?
3. தேங்காய் எண்ணெய் எதிலிருந்து எடுக்கப்படுகிறது?

பயிற்சி

குலை குலையாக, சீப்புச்சீப்பாக, கொத்துக் கொத்தாக, அடுக்கு அடுக்காக; இச் சொற்களைச் சரியானபடி சேர்த்துப் படி. மாங்காய்கள்———காய்க்கும். வாழைக் காய்கள்——————. பூக்கள்————பூக்கும். இலைகள்————தழைக்கும்.

23. காலத்தின் அருமை

காலமே கருந்தனம் ஆகும். செல்வப் பொருள் அருமையானது. பாடுபட்டுச் செல்வத்தைச் சம்பாதிக்கவேண்டும். செல்வத்தைச் செலவு செய்தால், மறுபடியும், இழந்த அளவைச் சம்பாதிக்கலாம்.

காலம் கழிந்துவிட்டால், கழிந்த காலம் மறுபடியும் வராது. ஆகையால், காலம் மிக அருமையானது. அதை வீணுகக் கழிக்கக் கூடாது. நல்ல காரியங்களைச் செய்து, காலத்தைச் சுகமாக அநுபவிக்கவேண்டும்.

படிப்பது நல்ல காரியம்; அதனுல் அறிவு வளரும். நல்ல வகையில் பொருள் தேடவேண்டும். பொருள் இருந்தால்தான் பல சுகங்கள் ஏற்படும். பிறருக்கு உதவ

வேண்டும். நாட்டிற்கு உழைக்க வேண்டும். இவற்றால் புகழ் உண்டு. கடவுளைச் சிந்திக்கவேண்டும். கடவுளை வணங்குவோர்க்குத் துன்பங்கள் இல்லை.

எந்தக் காரியத்தையும் சரியான காலத்தில் செய்யவேண்டும். நேரத்தில் எழுந்திரு; காலம் தப்பாமல் பள்ளிக்கூடம் போ; ஒவ்வொரு நிமிடமும் பாடத்தில் கவனமாக இரு. விளையாடும் நேரத்தில் விளையாடு. படிக்கவேண்டிய நேரத்தில் படி. தூங்கவேண்டிய நேரத்தில் தூங்கு.

ஒரு வேலை செய்யும் நேரத்தில் மற்றொன்றைச் சிந்திக்காதே. அதனால் இரு வேலையும் கெடும். செய்யக்கூடியவைகளை உடனுக்குடன் செய்.

காலம் செய்வது தோழன் செய்யமாட்டான். காலம் தெரிந்து காரியங்களைச் செய்தால் நன்மை உண்டாகும்.

இளமையில் கற்கவேண்டும்; வாலிபத்தில் பொருள் ஈட்டவேண்டும்; முதுமையில் ஓய்வும் சுகமும் கொள்ளவேண்டும்.

கருந்தனம்	பாடுபட்டு	வீணுக
புகழ்	சிந்திக்க	அநுபவிக்க
தாழ்த்தாமல்	உடனுக்குடன்	நஷ்டம்
ஈட்ட	ஒதுக்கி	கஷ்டம்

கேள்விகள்

1. 'கழிந்துவிட்டால் வராது' எது?
2. 'இருவேலையும் கெடும்' எப்போது?
3. 'தோழன்கூடச் செய்யமாட்டான்' எதை?

பயிற்சி

அடுக்கு அடுக்காக எடுத்து எழுது :—

1. கற்கவேண்டும்; பொருள் ஈட்டவேண்டும்; ஓய்வும் சுகமும் கொள்ளவேண்டும். சரியான காலத்தில் செய்ய வேண்டும். மிக அருமையானது.

2. காலம், முதுமையில், காரியங்களை, வாலிபத்தில், இளமையில்.

24. கடிகாரம்

(கடிகாரம் காலையில் 5 மணி அடித்தது)

'டிங் - டிங் - டிங் - டிங் - டிங்'

(தாயார் தன் மகனை எழுப்பினாள்)

மணி ஐந்து அடித்துவிட்டது. படுக்கையை விட்டு எழுந்திரு. வெளி வாசல் சென்று, பல் துலக்கு. இன்று வேலைகள் என்னென்ன என்று சிந்தித்துக்கொள். சோம்பல் இல்லாமல், காலம் போக்காமல் வேலைகளைத் தொடங்கு.

(மகன் தனக்குள்ளே சிந்திக்கிறான்; தாயாரைக் கேட்கிறான்)

கடிகாரம் எப்படி மணி அடிக்கிறது? முட்கள் சுற்றி வருகின்றன; கணக்காகச் சுற்றுகின்றன; பெரிய முள் ஒரு சுற்று வந்தால் சிறிய முள் ஒரு இலக்கம் நகர்கிறது. பன்னிரண்டு எண்கள் அதில் குறிக்கப்பட்

டிருக்கின்றன. மணி அடிக்கும் போதெல்லாம் பெரிய முள்ளைப் பார்க்கிறேன். பன்னிரண்டில் நிற்கிறது. சிறிய முள் வெவ்வேறு இலக்கத்தில் நிற்கிறது. சிறிய முள் எந்த இலக்கத்தில் நிற்கிறதோ, அத்தனை தடவை சத்



தம் கேட்கிறது. ஏழு அடித்தால் ஏழு மணி; பதினொன்று அடித்தால் பதினொன்று மணி. கடிகாரம் எப்படி ஓடுகிறது? மணிக்கணக்கு அதற்கு எப்படித் தெரிகிறது?

(தாயார் விபரத்தை விளக்குகிறார்)

கடிகாரம் ஒரு செயற்கை இயந்திரம். மேலே தெரிவது தட்டு;

கண்ணுடி அதற்குப் பாதுகாப்பு. இயந்திரம் கூண்டிற்குள் இருக்கிறது. அதனுள் பல சக்கரங்கள் காணப்படும். இரும்புச் சுருள் வில்லும் இருக்கும். அவை கணக்காகச்சுழலும். பொழுதின் கணக்கின்படி அவை சுழலும். அக்கணக்கை முட்கள் தெரிவிக்கும். மக்கள் மதியூகத்தால் இயந்திரங்களைக் கண்டுபிடிக்கிருர்கள். கடிகாரங்களில் பல வகைகள் உண்டு.

கடிகாரங்கள் எல்லாம் பிற நாடுகளிலிருந்தே நமக்கு வருகின்றன. இவ்வளவு அவசியமான இயந்திரங்களை இந்தியர்களே செய்யவேண்டும். எல்லாக் கடிகாரங்களும் மணியை அறிவிக்கும். ஆனல் மணி அடிக்கமாட்டா. சுவற்றில் மாட்டுபவை மணி

அடிக்கும். அவை 'கிளாக்' எனப் படும். கீழே வைப்பவை டைம் பீஸ். மற்றவை வாட்ச்.

சோம்பல்	காலம் போக்காமல்	இலக்கம்
முட்கள்	கணக்காக	நகர்கிறது
பாதுகாப்பு	செயற்கை	இயந்திரம்
சுருள்	மதியூகம்	நேர்த்தியாக
பிறநாடு	அவசியமான	இந்தியர்
கடிகாரம்	மாட்டுபவை	

கேள்விகள்

1. கடிகாரத்தில் எத்தனை இலக்கங்கள் இருக்கின்றன?
2. மணி அடிக்கும்போது பெரியமுள் எங்கே நிற்கும்?
3. கடிகாரத்தில் என்னென்ன வகைகள் உண்டு?

பயிற்சி

கிளாக், வாட்ச், டைம்பீஸ். இவைகளைக் கீழே எடுத்தெழுது.

சரியானபடி சேர்த்துப்படி.

சுவற்றில் மாட்டுவது——————.

மேசையின்மேல் வைப்பது——————.

கையில் கட்டுவது——————.

25. ஊக்கமுள்ள காகம்

பாட்டு

தண்ணீர் கிடைக்காமல்—காகமொன்று
  தவித்தலே கையிலே
மண்ணாற் செய்த ஒரு—சாடியினை
  வழியிற் கண்டதுவே

சாடியின் மீதிருந்து—தலையைச்
  சரித்து நோக்கிடவே
சாடியிலே தூரில் சற்றே
  தண்ணீர் தெரிந்ததம்மா

காகம் உடன் எழுந்து—சிறு சிறு
  கற்கள் பொறுக்கி வந்து
ஊகமாய்ச் சாடியினுள்—அவற்றை
  ஒவ்வொன்றாய் இட்டதம்மா

இட்டிடவே நீரும்—மேலே
  எழுந்து வந்ததம்மா
சட்டமாகக் குடித்துக்—காகம்
  தளர்ச்சி தீர்ந்ததம்மா

ஊக்கம் உடையவர்க்குத்—துன்பம்
  உலகில் இல்லையம்மா
ஆக்கம் பெருகுமம்மா.—இதை நீ
  அறிய வேண்டுமம்மா.

தேசிக விநாயகம் பிள்ளை.

1
2
3
4
5
6
S. BRAHMA.

26. படத்தைப் பார்த்துக் கதையைச் சொல்லு

குல்லாய் வியாபாரியும் குரங்குகளும்

ஒரு சாலை வழியே ஒரு குல்லாய் வியாபாரி சென்றான். அவனிடம் ஒரு மூட்டை ——— இருந்தன. ஒரு மரத்தின்கீழ் ———. ஒரு குல்லாயைத் ———. பிறகு தூங்கிவிட்டான். அந்த மரத்தின்மேல் ——— குரங்குகள் ——— ஒவ்வொன்றும் ஒவ்வொரு ——— மரத்தின்மேல் ———.

வியாபாரி விழித்துப் பார்த்தான். மூட்டையில் ———. அண்ணாந்து பார்த்தான். ஒவ்வொரு ———.

தன் தலையில் இருந்த ——— எறிந்தான். குரங்குகளும் ———. எல்லாக் குல்லாய்களையும் அவன் ——— சந்தோஷமாக ———.

மனிதர் ஒன்று செய்வதைப் பார்த்தால் ——— செய்யும்.

27. வாழ்க! வாழ்க!

வாழ்க வாழ்க உலகெலாம்
வாழ்க எங்கள் தேசமும்

வாழ்க எங்கள் தமிழகம்
வாழ்க எங்கள் மனையறம்

வாழ்க மேழிச் செல்வமே
வளர்க நாட்டுக் கைத்தொழில்

வாழ்க எங்கள் வாணிபம்
வாழ்க நல்ல அரசியல்

அன்பு கொண்டு அனைவரும்
அச்ச மின்றி வாழ்கவே

துன்ப மேது மின்றிநம்
துக்கம் யாவும் நீங்கியே

இன்பமான யாவுமெய்தி
இந்த நாட்டில் யாவரும்

தெம்பினல் தெளிவு பெற்றுத்
தேவர் போற்ற வாழ்குவோம்

நாமக்கல் கவிஞர்

28. உலக நீதி

1. ஓதாமல் ஒருநாளும் இருக்கவேண்டாம்.
2. ஒருவரையும் பொல்லாங்கு சொல்ல வேண்டாம்.
3. வஞ்சனைகள் செய்வாரோடு இணங்க வேண்டாம்.
4. நெஞ்சாரப் பொய்தன்னைச் சொல்ல வேண்டாம்.
5. போகவிட்டுப் புறஞ்சொல்லித் திரிய வேண்டாம்.
6. அடுத்தவரை ஒருநாளும் கெடுக்க வேண்டாம்.
7. தனந்தேடி உண்ணாமல் புதைக்க வேண்டாம்.
8. கற்றவரை ஒருநாளும் பழிக்கவேண்டாம்.
9. மதியாதார் தலைவாசல் மிதிக்க வேண்டாம்.
10. கருதாமல் கருமங்கள் முடிக்கவேண்டாம்,
11. கணக்கழிவை ஒருநாளும் பேச வேண்டாம்.
12. வாதாடி வழக்கழிவு செய்யவேண்டாம்.
13. தெய்வத்தை ஒருநாளும் மறக்க வேண்டாம்.

29. ஆத்திசூடி

1. அறம் செய விரும்பு.
2. ஆறுவது சினம்.
3. இயல்வது கரவேல்.
4. ஈவது விலக்கேல்.
5. உடையது விளம்பேல்.
6. ஊக்கமது கைவிடேல்.
7. எண் எழுத்து இகழேல்.
8. ஏற்பது இகழ்ச்சி.
9. ஐயம் இட்டு உண்.
10. ஒப்புரவு ஒழுகு.
11. ஓதுவது ஒழியேல்.
12. ஔவியம் பேசேல்.
13. அஃகம் சுருக்கேல்.

132425

Tamil Nattu Vachakam

SECOND BOOK

1C
2303

EDITED BY
MANI. MUTHUSAWMY

MURUGAN PATHIPPAGAM
KULITALAI, TIRUCHIRAPALLI

Copyright] *[Price: Annas Five*